# මහවැලි සංවර්ධන හා පරිසර අමාත්‍යාංශය
# மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
# Ministry of Mahaweli Development and Environment

"සම්පත්පාය", අංක 82, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"சம்பத்பாய", இல 82, இரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல, இலங்கை.
"Sampathpaya", No 82, Rajamalwatta Road, Battaramulla, Sri Lanka.
Gen.Tel. + 94-11-2882112 - 3

ලේකම් / செயலாளர் / Secretary +94-11-2877290
ෆැක්ස් / தொலை நகல் / Fax +94-11-2877292


මගේ අංකය / எனது இல / My No: 03/02/02 Tree planting month
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2016/08/

**சுற்றாடல் சுற்றறிக்கை இலக்கம் 01/2016**

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபை பிரதம செயலாளர்களுக்கும்,
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
பிரதேச செயலாளர்களுக்கும்,
நியதிச்சட்ட சபை / அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும்,

## <u>"வன ரோப்பா" நிகழ்ச்சித்திட்டம். - 2016</u>

**01 நோக்கம்**

1.1 சுற்றாடல் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராக அதிமேதகைய சனாதிபதியினால் எதிர்வரும் மூன்று ஆண்டு (03) காலத்துக்குள் நாட்டிள் உள்ள காடுகளை 32% வரை அதிகரிப்பதற்கான இலக்கை எய்து கொள்ளும் பொருட்டு, அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் தரப்பினரின் முனைப்புடனான பங்களிப்புடன் வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் "வன ரோப்பா" தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மர நடுகையை முறையாக அறிமுகப்படுத்தும் பொருட்டு எல்லா ஆண்டும் ஒத்தோபர் மாதம் "வன ரோப்பா" தேசிய மர நடுகை மாதமாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் தரப்பினரின் பங்களிப்புடன் இந்த ஆண்டு ஒக்தோபர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 31 ஆந் திகதி வரை நடத்துவதற்கு சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.2 இம்முறை 2016 "வன ரோப்பா" தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நிகழ்வு அதிமேதகைய சனாதிபதியின் தலைமையில் 2016 ஒக்தோபர் மாதம் 26 ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு திருகோணமலை மாவட்டத்தில் நடைபெறும்.

1.3 மேலும் சிறந்த சுற்றாடல் முறைமையை பாதுகாக்கும் பொருட்டு அது சார்ந்த வனச் செய்கைக்கான ஊக்குவிப்பு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பொதுமக்கள் சார்ந்த இடங்களில் காடுகளை வளர்ப்பதற்கு ஏதுவாக அமைகின்ற மரங்களை நடுவதன் மூலம் பசுமை ஊக்குவிப்பு மற்றும் இதன் நன்மைகளை மக்களுக்கு கிடைக்கின்றமையை உறுதிப்படுத்திக் கொள்ளல போன்றன "வன ரோப்பா" தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்களாகும். சேதத்துக்குள்ளான காட்டுப் பிரதேசங்களில் மர நடுகையினைக் கொண்டு மீளமைத்தல், அரச, அரச சார்பற்ற மற்றும்

தனியார் துறைகள் ஒருங்கிணைந்து சமூக ரீதியான பல்வேறுபட்ட ஆக்கபூர்வமான மற்றும் திறமுறையான வன செய்கைக்கு தொடர்புபடுத்தல் போன்றவற்றையும் பிரதானமாகக் குறிப்பிடலாம்.

1.4 அத்துடன் வனவியல் முறைமையை பின்பற்றி புதிதாக காடுகளை அதிகரித்தல் மற்றும் தற்பொழுதுள்ள காடுகளின் தரங்களை அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட திட்டவட்டமான காணிகளில் அதாவது மலையுச்சி, உயர் நீர்வீழ்ச்சி போசாக்கினைக் கொண்ட பிரதேசங்கள், சேதத்துக்குள்ளான பிற காணிகள் அத்துடன் கடற்கரை பிரதேசங்கள் சார்ந்த பசுமைப் பிரதேசங்களில் அதிகரித்த மர நடுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1.5 கடந்த ஆண்டுகள் நடத்தப்பட்ட தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களில் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய நிகழ்ச்சித்திட்டத்தில் குறைபாடுகளை குறைத்துக் கொண்டு இனங்காணப்பட்ட திட்டவட்டமான இடங்களில் நன்கு திட்டமிட்டு மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தை திறமுறையானவாறு இந்த ஆண்டு தேசிய மரநடுகை மாதத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 02 திறமுறை

2.1 இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் இம்முறை காடுகளை போதுமான அளவு பண்புசார் தன்மையுடன் மேம்படுத்துவதாகும். இது தொடர்பிலான பல்வகை நுழைவின் ஊடாக பொதுமக்களிடையே மரநடுகை சம்பந்தமாக அனுகூலமான எண்ணக்கருவை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுமக்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன நாற்றுகளை வன ரோப்பா நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மரநடுகைக்காகத் தூண்டுதல் பாராட்டப்படக்கூடிய விடயமாகும் என்பதுடன் இதற்காக தமது பிரதேசத்துக்கு, வானிலை வலயத்துக்கு தமது அல்லது தமக்கு அருகாமையில் வசிக்கின்ற பொதுமக்களின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நாற்றுமேடைகளை உருவாக்கிக் கொள்ளுவதற்கும் இதன் மூலம் உதவியளிக்கப்படுகின்றது.

2.2 மரநடுகை நடவடிக்கைகளில் பொதுமக்களை சுயமாகவே தொடர்புபடுத்திக் கொள்ளுவதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் உதவியாக இருக்கும் என தெரிவிப்பதுடன் தமது அல்லது தமது குடும்ப உறுப்பினர்களின் வாழ்வுடன் தொடர்புபட்ட விசேட தினமொன்றாகக் கொண்டாடுவதற்கும், தேசிய ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்த தினமொன்றாகக் கொண்டாடுவதற்கும் இவர்களை தொடர்புபடுத்தலாம் எனச் சுட்டிக்காட்டுகின்றேன். அத்துடன், உற்பத்திகளுக்குரிய பெறுமதிகளுடன் நாற்று சார்பு நண்பர்களுடன் இதை பரிமாறிக்கொள்ளல், நன்கொடையாக வழங்கல் போன்றவற்றின் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தை உயிரோட்டமாக்கிக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

2.3 அரச நிறுவனங்களில் “சுற்றாடல் வட்டம்” தாபிக்கப்பட்டு இதன் மூலம் பிரதேசத்துக்கு பொருத்தமான நாற்றுகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஊழியர்கள் கடமை நேரங்களுக்கு அப்பாலும் நாற்றுகளை உருவாக்கிக் கொள்ளுவதற்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை தூண்டுவதன் ஊடாக அவர்களது சேவை மனநிறைவை மேம்படுத்துவதற்கும் முடியும்.

2.4 முப்படை மற்றும் சிவில் பாதுகாப்பு படையின் முனைப்புடனான பங்களிப்பை மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்காகப் பெற்றுக் கொள்ளுவதன் மூலம் மிக வினைத்திறன் வாய்ந்ததும், உற்பத்தித்திறன் வாய்ந்ததும் திறமுறையானதுமான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கான வாய்ப்புகள் உண்டு எனவும் சுட்டிக்காட்டுகின்றேன். அத்துடன் உரிய முகாம்களில், முப்படை மற்றும் சிவில் பாதுகாப்பு படையின் கட்டுப்பாட்டின் கீழ்

காணப்படும் வன செய்கைகளுக்கு பொருத்தமான காணிகள், இதற்கு முன்னர் ஏதும் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு தற்பொழுது அழிந்து போகக் கூடிய நிலையில் காணப்படுகின்ற காணிகளில் தமது பிரதேசத்துக்கு ஏற்றவாறான வானிலை வலயத்துக்கு பொருத்தமான மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் பொருத்தமாகும்.

2.5 வன ரோப்பா நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் காடுகளை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், பல்வேறுபட்ட காடு சார்ந்த நிலைகளைக் கொண்ட வனச் செய்கைகள் வீட்டுத்தோட்டங்களில் இருந்து மரநடுகைக்குப் பொருத்தமான எல்லா இடங்களிலும் தாபிப்பதன் ஊடாக மரநடுகைகளினால் எதிர்பார்க்கப்படுகின்ற பல்வேறு பயன்பாடுகளை நாட்டுக்கு வழங்குவதற்கும் இதன் மூலம் இயலுமாக இருக்கும்.

## 03 நடைமுறை

3.1 சகல மாவட்ட செயலாளர்களினாலும் தமது மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் பொருத்தமான குறித்துரைக்கப்பட்ட இடங்களை இனங்கண்டு மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். மாகாண பிரதம செயலாளர்களினால் தமது மாகாணத்தின் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற பிரதேசங்களிலும் இவ்வாறு இனங்காணப்பட்ட குறித்துரைக்கப்பட்ட இடங்களிலும் மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்கும் எதிர்பார்க்கின்றேன். இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான தகவல்கள் இந்த அமைச்சுக்கு வழங்குவதற்கும் பிரதேசத்தின் சமூக அமைப்புகளினதும் பங்களிப்புடன் மற்றும் மொத்த பாடசாலை மாணவ சமூகத்தின் முனைப்புடனான பங்களிப்பினை பெற்றுக் கொள்ளுவதும் மிக முக்கியம் எனவும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

3.2 இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முதற்கட்டம் ஒக்தோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டாலும் இது எமது நாட்டின் பருவ மழைக்கு அமைவாக நாடு பூராவும் இந்த ஆண்டுக்குள் பல்வேறு காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டமாகும். ஆதலால் இந்த நிகழ்ச்சித்திட்டம் எதிர்வரும் மரநடுகை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக வருடம் பூராவும் நடைமுறைப்படுத்துமாறும் கோருகின்றேன்.

3.3 இந்த நிகழ்ச்சித்திட்டம் சகல அரச நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு தேசிய, மாகாண, பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன். இவ்வாறு எல்லா மட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான நாற்றுகளை வனப் பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்தும் அரச மரக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளும் உண்டு. (வனப் பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்தும் அரச மரக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளக் கூடிய நாற்றுகள் தொடர்பான விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.). உரிய விடயங்கள் தொடர்பிலான மேலதிகத் தகவல்களை மாவட்ட சுற்றாடல் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடுமாறும் கேட்டுக் கொள்ளுகின்றேன். குறிப்பாக வன ரோப்பா நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாவட்ட மட்டத்தில் ஏனைய அரச நிறுவனங்களுடன் செயற்படும் போது மாவட்ட செயலாளருக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு குறித்த குழுவின் செயலாளராக மாவட்ட வன உத்தியோகத்தர் செயற்படுவார்.

3.4 இதற்கு மேலதிகமாக மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஒருங்கிணைவாக சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் விழிப்பூட்டும் செயலமர்வுகள், மாகாண, மாவட்ட, பிரதேச மற்றுமி கிராமிய மட்டத்தில் உங்களது நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 31 ஆந் திகதி வரையிலான ஒரு மாத காலத்துக்கு நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குமாறும் தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

3.5 இந்த மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடப்படுகின்ற சகல நாற்றுகளை பேணுவதும், பராமரிப்பதும் மற்றும் அறிக்கையிடுவதும் மிகவும் முக்கியமான விடயங்களாகையினால்

இதற்கமைவாக இந்த பணிகளுடன் தொடர்புபடுகின்ற நிறுவனங்களினால் மீளாய்வுப் பணிகளை மேற்கொள்ளுவது பொருத்தம் எனவும் இத்தால் பிரேரிக்கின்றேன்.

## 04 ஒருங்கிணைப்பு

4.1 "வன ரோப்பா" தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய மட்டத்தில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக இந்த அமைச்சின் பணிப்பாளர் (வன வள முகாமைத்துவம்) கீழ் வன ரோப்பா பணியகம் என்னும் பெயரில் புறம்பான பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன் இதன் தொலைபேசி இலக்கம் மற்றும் பெக்ஸ் இலக்கம் பின்வருமாறு.

தொலைபேசி இலக்கம் - 011 -2878806 / 011 – 2866656
பெக்ஸ் இலக்கம் - 011 - 2877287
மின்னஞ்சல் - dirfr@environmentmin.gov..lk / wanaropatpp@gmail.com

4.2 இதற்கு மேலதிகமாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தம் போது தேவையான ஒத்துழைப்பையும் மதியுரைச் சேவைகளையும் அமைச்சின் பல்வேறு பிரிவுகளினாலும் நிறுவனங்களினாலும் வழங்கப்படும்.

கையொப்பம்

**உதய ஆர். செனவிரத்த**
செயலாளர்
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

**பிரதிகள்:**

1. சனாதிபதியின் செயலாளர் - தகவலுக்காக
2. பிரதம அமைச்சரின் செயலாளர் - தகவலுக்காக
3. கணக்காய்வாளர் - தகவலுக்காக
4. காடு பேணுநர் தலைமை அதிபதி, வனப்பாதுகாப்புத் திணைக்களம்
5. பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம்.
6. தலைவர், மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்.
7. தலைவர், மத்திய சுற்றாடல் அதிகாரசபை.
8. பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகாரசபை
9. தலைவர், அரச மரக் கூட்டுத்தாபனம்.
10. தலைவர், புவிச்சரிதவியல்,அளவை, சுரங்கப்பணியகம்
11. தலைவர், தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை
12. தலைவர், கரையோர சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
13. தலைவர், இரத்தினக்கல்,ஆபரண,ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்.

(4–13) தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்காக